Deposition of witness
(Chapter XXIII code of Criminal Procedure)
In the court of Judicial Magistrate No.I, Tindivanam.

**CASE NO.CC. 466/2025 PW-4**

Name : வசந்த்
Father / Husband name : வளையாபதி
Village : பூதேரி
Age : 28
Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 this day 07.03.2026

Accused present. Both side counsel present.

**முதல் விசாரணை**

நான் தற்போது வாழைப்பழம் வியாபாரம் செய்துவருகிறேன். சாட்சி சுந்தர் என்பவரை எனக்கு தெரியும். என்னிடம் காட்டப்படும் ஆவணமான பார்வை மகசரில் உள்ள 2வது கையொப்பம் என்னுடையது தான். கடந்த 27.03.2025 அன்று பகல் சுமார் 11.30 மணிக்கு திண்டிவனம் செஞ்சி பேருந்து நிறுத்தம் அருகே முன்தினம் நடந்த விபத்து சம்மந்தமாக விசாரித்து வரைபடம் வரைந்து எழுதி என்னிடம் கையொப்பம் வாங்கினார்கள். என்னுடன் சுந்தர் என்பவரும் கையொப்பம் செய்தார். போலிசார் என்னை விசாரித்தார்கள். **பார்வை மகசரில் உள்ள 2வது சாட்சியின் கையொப்பம் மட்டும் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

என்னை விசாரித்தது எந்த போலிஸ் என்று தெரியாது என்றால் சரிதான். நான் பூதேரி கிராமத்தை சேர்ந்தவர் என்றால் சரிதான். அ.சா.1 கஸ்தூரி என்பவரை தெரியுமா என்றால் தெரியாது. அ.சா.1 பூதேரி கிராமத்தை சேர்ந்தவர் என்றால் தெரியாது, நான் தற்போது கிடங்கலில் வசித்துவருகிறேன். நான் கையொப்பம் செய்த ஆவணத்தை படித்து பார்த்தேனா என்றால் படித்து பார்த்தேன். என்னை போலிசார் எங்கு விசாரித்தார்கள் என்றால் செஞ்சி பேருந்து நிறுத்தம்

அருகேயுள்ள முருகன் ஓட்டல் அருகே இருந்தபோது விசாரித்தார்கள். செஞ்சி பேருந்து நிறுத்தத்திற்கு உள்ளே உள்ள கடைகள் பற்றி தெரியுமா என்றால் தெரியும். செஞ்சி பேருந்து நிறுத்தத்தில் அம்மா உணவகம் கிழக்கு எந்த திசையில் உள்ளது என்றால் சரிதான். ஜெயராமன் மண்டபம் எதிரில் மேற்கு திசையில் உள்ளது என்றால் சரிதான். திண்டிவனம் - செஞ்சி சாலை வடக்கு தெற்கு திசையில் உள்ளது என்றால் சரியல்ல, மேற்கு திசையில் உள்ளது. நான் சம்பவயிடத்தில் இல்லை, அதனால் தான் முன்னுக்கு பின் முரணாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. அ.சா.1 எனது உறவினர் என்பதால் அவருக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் சம்பவயிடத்தில் வைத்து கையொப்பம் செய்யவில்லை, காவல் நிலையத்தில் செய்தேன் என்றால் சரியல்ல.

/ திறந்த நீதி மன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால்
தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அதை தட்டச்சரால் தட்டச்சு
செய்யப்பட்டு பின்பு அவருக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு
அவர் சரி என்று ஒப்புக்கொண்டவுடன் என்
முன்பாக கையொப்பமிட்டார்//

நீதித்துறை நடுவர் எண். 1 , திண்டிவனம்.